**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி: 06.05.2026

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## பத்திரிக்கை குறிப்பு

### ஒருங்கிணைந்த இளமறிவியல் மாணவர் சேர்க்கை 2026–2027

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் (வேளாண்மைப் பிரிவு)

இந்த கல்வியாண்டில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் (TNAU) மற்றும் வேளாண்மைப் பிரிவு, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கும் (AU) ஒரே இணையதள விண்ணப்பம் வழியாக இளமறிவியல் மாணவர் சேர்க்கை நடைபெற உள்ளது.

ஒருமித்த இணையதள விண்ணப்பத்தின் மூலம் பின்வரும் படிப்புகளுக்கான சேர்க்கை நடை பெற உள்ளது.

1. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்: **14** இளமறிவியல் பாடப்பிரிவுகள்

மற்றும்

2. அண்ணாமலைப் பல்கலைக்கழகம் (AU): **3** இளமறிவியல் வேளாண் பாடப்பிரிவுகள்

**விண்ணப்ப இணையதள முகவரி மற்றும் தேதி**

இணையதள விண்ணப்பம் http://tnau.ucanapply.com என்ற இணையதள முகவரியில் 06.05.2026 லிருந்து 08.06.2026 வரை பூர்த்தி செய்து சமர்ப்பிக்கலாம்.

**விண்ணப்பக் கட்டணம்**

பொதுப்பிரிவு (OC), பிற்படுத்தப்பட்டோர் (BC), பிற்படுத்தப்பட்டோர் (இஸ்லாமியர்) BC(M) மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் MBC/DNC மாணவர்களுக்கு ரூபாய்: 600/- ஆதிதிராவிடர் (SC), அருந்ததியர் (SCA) மற்றும் பழங்குடியினர் (ST): ரூபாய். 300/-

**இணையதள விண்ணப்ப செயல்முறை**

இணையதள மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பம் கீழ்க்கண்ட நடைமுறைகளை உள்ளடக்கியது. இணையதள பதிவு, விண்ணப்பங்களை நிரப்புதல், தரவரிசைப் பட்டியல் வெளியீடு, இணையதள கலந்தாய்வு, இடஒதுக்கீடு, சான்றிதழ் சரிபார்ப்பு, மேல்நோக்கிய நகர்வு முறை, தற்காலிக இடஒதுக்கீடு, சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் சமர்பிப்பு.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக இணையதள http://tnau.ucanapply.com முகவரியில் மாணவர்களுக்கான வழிகாட்டுதல்கள், அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் மற்றும் மாணவர் சேர்க்கைக்கான வழிமுறைகள் உள்ளன. கலந்தாய்விற்குரிய தேதி மற்றும் அதற்குரிய செயல்முறைகள் அனைத்தும் உடனுக்குடன் இணையதளத்தில் வெளியிடப்படும்.

## அ. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

### அ.1. இளமறிவியல் பட்டப்படிப்பு 2026–2027

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 2026–2027ஆம் கல்வியாண்டிற்கான பட்டப்படிப்பு மாணவர் சேர்க்கைக்கான இணையதள விண்ணப்பங்கள் 06.05.2026 முதல் http://tnau.ucanapply.com என்ற இணையதளத்தில் கிடைக்கப்பெறும். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் கீழ்காணும் 14 பட்டப்படிப்புகளை 18 உறுப்பு மற்றும் 28 இணைப்புக் கல்லூரிகள் மூலம் வழங்குகிறது.

**வேளாண்மை அறிவியல் கல்வி பாடப்பிரிவுகள்**

1. இளமறிவியல் (மேதமை) வேளாண்மை
2. இளமறிவியல்(மேதமை) தோட்டக்கலை
3. இளமறிவியல் (மேதமை) வேளாண்மை (தமிழ்வழி)
4. இளமறிவியல் (மேதமை) தோட்டக்கலை (தமிழ்வழி)
5. இளமறிவியல் (மேதமை) வனவியல்
6. இளமறிவியல் (மேதமை) உணவு, மற்றும் ஊட்டச்சத்து உணவு முறை
7. இளமறிவியல் (மேதமை) பட்டுவளர்ப்பு மற்றும்
8. இளமறிவியல் (மேதமை) வேளாண் வணிக மேலாண்மை

**வேளாண்மை தொழில்நுட்ப கல்வி பாடப்பிரிவுகள்**

9. இளம் தொழில்நுட்பம் (வேளாண் பொறியியல்)
10. இளம் தொழில்நுட்பம் (உணவுத் தொழில்நுட்பம்)
11. இளம் தொழில்நுட்பம் (உயிரித் தொழில்நுட்பம்)
12. இளம் தொழில்நுட்பம் (ஆற்றல் மற்றும் சுற்றுச்சூழல் பொறியியல்)
13. இளம் தொழில்நுட்பம் (உயிரித் தகவலியல்) மற்றும்
14. இளம் தொழில்நுட்பம் (வேளாண்மை தகவல் தொழில்நுட்பம்)

மாணவர் சேர்க்கைக்குரிய அனைத்து நடைமுறைகளும் இணையதள வாயிலாகவே நடைபெறும். பதினான்கு (14) இளமறிவியல் பட்டப்படிகளுக்கும் ஒரே ஒரு இணையவழி விண்ணப்பம் மட்டுமே போதுமானது. இக்கல்வியாண்டில் உறுப்பு கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்கான எண்ணிக்கை 2516 ஆகவும் மற்றும் இணைப்பு கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்கான எண்ணிக்கை 4736 (அரசாங்க இடஒதுக்கீடு 3051 + மேலாண்மை இடஒதுக்கீடு: 1685 = 4736) ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்குரிய விபரங்கள் இணைப்பு – 1 ல் கொடுக்கப்பட்டுள்ளது.

## இணைப்பு I

### தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரிகளில் பட்டப்படிப்பு வாரியாக உள்ள மொத்த இடஒதுக்கீடு

| வ. எண். | பட்டப்படிப்புகள் | மொத்த இடஒதுக்கீடு (நிர்ணயிக்கப்பட்டது) |
|---|---|---|
| 1. | இளமறிவியல் (மேதமை) வேளாண்மை | 1335 |
| 2. | இளமறிவியல்(மேதமை)தோட்டக்கலை | 397 |
| 3. | இளமறிவியல் (மேதமை) வேளாண்மை (தமிழ்வழி) | 50 |
| 4. | இளமறிவியல் (மேதமை) தோட்டக்கலை (தமிழ்வழி) | 50 |
| 5. | இளம் தொழில்நுட்பம் (வேளாண் பொறியியல்)* | 140 |
| 6. | இளமறிவியல் (மேதமை) வனவியல். | 79 |
| 7. | இளமறிவியல் (மேதமை) பட்டுவளர்ப்பு | 42 |
| 8. | இளமறிவியல் (மேதமை) உணவு, மற்றும் ஊட்டச்சத்து உணவு முறையியல் | 67 |
| 9. | இளம் தொழில்நுட்பம் (உயிரித் தொழில்நுட்பம்)* | 78 |
| 10. | இளமறிவியல் (மேதமை) வேளாண் வணிக மேலாண்மை (சுயநிதி பாடம்) * | 56 |
| 11. | இளம் தொழில்நுட்பம் (உணவுத் தொழில்நுட்பம்)* | 86 |
| 12. | இளம் தொழில்நுட்பம் (ஆற்றல் மற்றும் சுற்றுச்சூழல் பொறியியல்)* | 76 |
| 13. | இளம் தொழில்நுட்பம் (உயிரித் தகவலியல்)* | 30 |
| 14. | இளம் தொழில்நுட்பம் (வேளாண்மை தகவல் தொழில்நுட்பம்)* | 30 |
| | **மொத்தம்** | **2516** |

***சுயசார்பு பாடப்பிரிவுகள்**

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் இணைப்புக் கல்லூரிகளில் பட்டப்படிப்பு வாரியாக உள்ள மொத்த இடஒதுக்கீடு

| வ. எண். | பட்டப்படிப்புகள் | மொத்த இடஒதுக்கீடு(நிர்ணயிக்கப்பட்டது) | | |
|---|---|---|---|---|
| | | அரசாங்க இடஒதுக்கீடு | மேலாண்மை இடஒதுக்கீடு | மொத்தம் |
| 1. | இளமறிவியல் (மேதமை) வேளாண்மை | 2576 | 1429 | 4005 |
| 2. | இளமறிவியல்(மேதமை) தோட்டக்கலை | 436 | 235 | 671 |
| 3. | இளமறிவியல் (மேதமை) வேளாண் வணிக மேலாண்மை | 39 | 21 | 60 |
| | **மொத்தம்** | **3051** | **1685** | **4736** |

**சிறப்பு இடஒதுக்கீடுகள்**

**இந்த கல்வியாண்டில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் கீழ்காணும் சிறப்பு ஒதுக்கீட்டிற்கான சேர்க்கை நடைபெற உள்ளது.**

**தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக இளமறிவியல் பாடபிரிவுகள்**

| | |
|---|---|
| அ. | **சிறந்த விளையாட்டு வீரர்களுக்கான இடஒதுக்கீடு:**<br>ஒரு அரசு உறுப்பு கல்லூரிக்கு தலா ஒரு இடம் வீதம் மொத்தம் 20 இடங்கள் வழங்கப்படும். |
| ஆ. | **முன்னாள் இராணுவ வீரர்களின் வாரிசுகளுக்கான இடஒதுக்கீடு:**<br>ஒரு அரசு உறுப்பு கல்லூரிக்கு தலா ஒரு இடம் வீதம் மொத்தம் 20 இடங்கள் வழங்கப்படும். |
| இ. | **மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு இடஒதுக்கீடு:**<br>உறுப்பு கல்லூரிகளில் நிர்ணயிக்கப்பட்ட இடங்களில் ஐந்து சதவீத இட ஒதுக்கீடு (மொத்தம் 128 இடங்கள்) |
| ஈ. | **7.5% அரசு பள்ளியில் பயின்ற மாணவர்களுக்கான இடஒதுக்கீடு:** மொத்தம் 418 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. |
| உ. | **தொழில்முறைக் கல்வி பாடப்பிரிவினருக்கான இடஒதுக்கீடு: (Vocational):**<br>நிர்ணயிக்கப்பட்ட இடங்களில் ஐந்து சதவீத இட ஒதுக்கீடு: மொத்தம் 234 இடங்கள் |
| ஊ. | **மூன்றாம் பாலினத்தவர்**: ஒரு அரசு உறுப்பு கல்லூரிக்கு தலா ஒரு இடம் வீதம் மொத்தம் 20 இடங்கள் வழங்கப்படும் மற்றும் |
| எ. | **அயலக வாழ் தமிழர்கள்**: 30 இடங்கள் |

**B. அண்ணாமலைப் பல்கலைக்கழகம் (வேளாண்மைப் பிரிவு)**

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் வேளாண் கல்வி 1958 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. தற்போது மூன்று இளமறிவியல் பட்டப்படிப்புகள் வழங்கப்படுகின்றன.

| வ. எண். | பட்டப்படிப்புகள் | மொத்த இடஒதுக்கீடு |
|---|---|---|
| 1. | இளமறிவியல் (மேதமை) வேளாண்மை – அரசு உதவி | 120 |
| 2. | இளமறிவியல் (மேதமை) வேளாண்மை – சுயசார்பு | 120 |
| 3. | இளமறிவியல்(மேதமை) தோட்டக்கலை | 100 |
| | **மொத்தம்** | **340** |

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

**அ.2. பட்டயப்படிப்புகள் 2026–2027**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைகழகத்தில் 2026–2027 ஆம் கல்வியாண்டிற்கான பட்டயப்படிப்பு மாணவர் சேர்க்கை மற்றும் கல்லூரி விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. மாணவர் சேர்க்கைக்கான அனைத்து நடைமுறைகளும் இணையதள வாயிலாகவே நடைபெறும்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்வி நிலையங்களில் இடஒதுக்கீடு**

| வ. எண். | பட்டயப்படிப்புகள் | கல்வி நிலையங்கள் | மொத்த இடஒதுக்கீடு (நிர்ணயிக்கப்பட்டது) |
|---|---|---|---|
| 1. | வேளாண்மை | வேளாண் கல்வி நிலையம், வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், குமுளூர். | 250 |
| 2. | வேளாண்மை (தமிழ் வழி) | வேளாண் கல்வி நிறுவனம், தேசிய பயறு ஆராய்ச்சி நிலையம், வம்பன் | 80 |
| 3. | தோட்டக்கலை | தோட்டக்கலை கல்வி நிலையம், தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், பேச்சிப்பாறை | 80 |
| 4. | வேளாண்மை பொறியியல் | வேளாண்மை பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், குமுளூர் | 40 |
| | | **மொத்தம் (அ)** | **450** |

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்வி (அரசு) நிலையங்களில் இடஒதுக்கீடு

### தோட்டக்கலை

| வ. எண். | கல்வி நிலையங்கள் | மொத்த இடஒதுக்கீடு (நிர்ணயிக்கப்பட்டது) |
|---|---|---|
| 1. | தமிழ்நாடு தோட்டக்கலை மேலாண்மை நிறுவனம், மாதவரம். | 50 |
| 2. | தோட்டக்கலை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம், தளி | 50 |
| 3. | காய்கறி மகத்துவ மையம், ரெட்டியார்சத்திரம், திண்டுக்கல் | 50 |
| | **மொத்தம் (ஆ)** | **150** |

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் இணைப்பு (தனியார்) நிலையங்களில் இடஒதுக்கீடு

| வ. எண் | பட்டயப்படிப்புகள் | மொத்த இடஒதுக்கீடு (நிர்ணயிக்கப்பட்டது) |
|---|---|---|
| 1. | வேளாண்மை பட்டயப்படிப்பு | 470 |
| 2. | தோட்டக்கலை பட்டயப்படிப்பு | 170 |
| | **மொத்தம் (இ)** | **640** |
| | **மொத்தம் (அ+ ஆ + இ)** | **1240** |

**உறுப்புக் கல்வி நிலையங்கள்**: **வேளாண்மை – 330, வேளாண்மை பொறியியல் – 40**
**தோட்டக்கலை – 230**
**இணைப்பு (தனியார்) கல்வி நிலையங்கள்: வேளாண்மை– 470, தோட்டக்கலை – 170**

மாணவர்கள் தங்களது விண்ணப்பங்களை http://tnau.ucanapply.com என்ற இணையதள முகவரியில் பூர்த்தி செய்து, விண்ணப்பக் கட்டணத்துடன் சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பக் கட்டணம் பொதுப்பிரிவு (OC), பிற்படுத்தப்பட்டோர் (BC) மற்றும் பிற்படுத்தப்பட்டோர் (இஸ்லாமியர்) (BCM) மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் (MBC/DNC) மாணவர்களுக்கு ரூபாய். 200/– மற்றும் ஆதிதிராவிடர் (SC), அருந்ததியர் (SCA) மற்றும் பழங்குடியினர் (ST) ரூபாய். 100/–

**மேலும் விவரங்களுக்கு**

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயமுத்தூர்.**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக கல்வி பாடங்களுக்கான விவரங்களை 9488635077, 9486425076 என்ற அலைபேசி எண்களிலும் மின்னஞ்சல் (email): ugadmissions@tnau.ac.in மூலமாகவும் வாரநாட்களில் காலை 9.00 மணியிலிருந்து மாலை 5 மணிவரை தொடர்புகொள்ளலாம்.

**அண்ணாமலைப் பல்கலைக்கழகம் (வேளாண்மைப் பிரிவு)**

அண்ணாமலைப் பல்கலைக்கழக கல்வி பாடங்களுக்கான விவரங்களை 9865703537 மற்றும் 9442029913 என்ற அலைபேசி எண்களிலும், மின்னஞ்சல் (email): agridean2015@gmail.com மூலமாகவும் வாரநாட்களில் காலை 10.00 மணியிலிருந்து மாலை 6 மணிவரை தொடர்புகொள்ளலாம்.

***மக்கள் தொடர்பு அலுவலர்***